டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலே கோடி செடிகளுக்கு இடையே துளசி செடியாகி துயரத்தை போக்கி வருபவரும், வீர மரங்களிடையே வில்வமரமாகி, விண்ணவரும் மன்னவரும் போற்றி நல்லாட்சி நடத்தி வருகின்ற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில், பட்டமேற்படிப்பில் அரசினுடைய ஒதுக்கீடு எவ்வளவு என்றும், அரசு இந்த ஆண்டு எத்தனைபேர்களுக்கு பி.ஜி.படிப்பில் சீட் கொடுக்கப்பட்டது என்றும் மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பலவிதமான கோர்சஸ் இருக்கின்றன. நான்-கிளினிக்கல் என்று சொன்னால், எம்.டி.யிலே மட்டும் 7 வகையான கோர்சஸ் இருக்கின்றன. எம்.எஸ். லே அனாட்டமி என்ற ஒன்று இருக்கிறது. அதைப்போல, கிளினிக்கல் சைடில் நமக்கு ஏறத்தாழ 11 எம்.டி. கோர்சஸ் இருக்கின்றன. 4 எம். எஸ். கோர்சஸ் இருக்கின்றன. அதுபோல, டிப்ளமோவிலே நமக்கு மொத்தமாக 17 வகையான கோர்ஸ் இருக்கின்றன. இதுபோக பல் மருத்துவத்திலே நமக்கு மொத்தமாக 7 வகையான கோர்சஸ் இருக்கின்றன. இதிலே ஏறத்தாழ 736 பேருக்கு மொத்தமாக நாம் இடம் கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதிலே சரிபாதி இடம் அரசு மருத்துவமனைகளிலே பணியாற்றுகிற மருத்துவர்களுக்காக ஒதுக்கப்படுகிறது. அவர்கள்தான் இதிலே போட்டியிட முடியும். வேறு யாரும் போட்டியிட முடியாது. எனவே, சரிபாதி இடம் அரசு மருத்துவர்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 63, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

63—

மனநல மையம் ஏற்படுத்துதல்

*** 39456**—திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் மனநல மையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

1996 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தருமபுரி மாவட்டத்தில் மனநல மையம் தனியாக ஏற்படுத்த அவசியமேதும் தற்போது இருப்பதாகத் தோன்றவில்லை.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் நிறைய பேர் மனவளர்ச்சி குன்றி நீண்ட நெடிய காலமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும், மற்றவர்களுக்கும் அது பெரும் தொல்லையாக இருந்து வருகிறது. உதாரணமாக, ஒரு கிராமத்தில் பல ஆண்டுகளாக சங்கிலியால் கட்டிவைக்கப்பட்டு இருந்த மனநலம் குன்றிய ஒருவரைப்பற்றி கடிதம் மூலம் அறிந்து, சென்னையில் உள்ள உதவும் கரங்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அவரைத் தங்களிடத்தில் கொண்டு வந்து அபயம் அளித்திருக்கிறார்கள். அதைப் போல பல கிராமங்களில் இருக்கிறார்கள். அவர்கள் மருத்துவமனைக்குச் செல்கிறபோது மருத்துவர்கள் கூட சில நேரங்களில் சரியான முறையில் உதவுவது இல்லை. சென்னையிலே தான் மன நல மையம் இருக்கிறது. சேலம், தர்மபுரி, வட ஆற்காடு போன்ற மாவட்டங்களை ஒன்று சேர்த்து, தர்மபுரி மாவட்டத்தில், தளி போன்ற நல்ல குளிர்ச்சியான பகுதியிலே இந்த மன நல மையத்தை அரசு அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கேயே தனியாக மன நல மருத்துவர்கள் பணியாற்றி வருகிறார்கள். ஒருநாளைக்கு ஐந்து பிற நோயாளிகள் வந்து செல்கிறார்கள் என்று எனக்குக் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே புற நோயாளிகளுக்குத் தேவையான சிகிச்சை அளிக்கப்படுகிறது. தேவையென்றால், உள் நோயாளிகளாக வைத்துக்கொள்வதற்கும் அங்கே இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள், மருத்துவமனையில் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று சொன்னால், அவர்களைச் சென்னையிலே வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். இங்கே மிகப் பெரிய மருத்துவமனை இருக்கிறது. அனேகமாக, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, பெரிய மருத்துவமனை நமக்கு இங்கே இருக்கிறது. அவர்களைப் பாதுகாப்பது, பராமரிப்பது என்பதற்கு ஆங்காங்கே தனித்தனியாக சின்னச்சின்ன மருத்துவமனைகள் வைத்தால் சரியாக இருக்காது. இன்னும் சொல்லப்போனால், இப்படிப்பட்ட நோயாளிகளைக் கொண்டு வந்துவிட்டு விட்ட பின்னாலே அவர்கள் யாருக்குத் தெரிந்தவர்கள் என்று தேடிக் கண்டுபிடிப்பதே சிரமமாக இருக்கிறது.

அவர்களை அங்கே கொண்டுவந்து விடும்போது, தவறான விலாசங்களைக் கொடுத்துவிட்டுப் போய் விடுகிறார்கள். அதற்குப் பின்னாலே அந்த நோயாளி ஓரளவுக்குக் குணம் ஆனாலும், அவர்களை அனுப்பிவைக்க முடியாமல், இங்கே நாமே அவர்களை வைத்துப் பராமரிக்க வேண்டிய நிலையும் இருக்கிறது. எனவே, ஆங்காங்கே சின்னச்சின்ன மருத்துவ மனைகளை ஏற்படுத்துவதை விட, அவர்களைச் சென்னையில் கொண்டு வந்து விட்டுவிட்டால், அரசே அவர்களுக்கு முழுமையாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு அத்துணை பராமரிப்பையும் பார்த்துக் கொள்கிறது. அவர்களின் சொந்தக்காரர்கள் வரவேண்டிய அவசியம் கூட இல்லை என்ற காரணத்தால், இங்கேயே உள்நோயாளிகளாக வைத்துக்கொள்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறோம்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறக்கும்போதே மனநலம் குன்றிய குழந்தைகள் போக, இன்றைய பரபரப்பான, போட்டி நிறைந்த வாழ்க்கையில், அறிவு நலத்தோடு பிறந்து வளர்ந்து, போட்டியிலே, வாழ்க்கைப் போராட்டத்திலே தோல்வியடைகின்ற பல பேர் மனநலம் குன்றியவர்களாகிவிடுகிறார்கள். அதேபோல, அரசியலிலேயும்கூட இன்று தன்னை எதிர்த்து தன்னை வெல்லமுடியாத பல அரசியல் தலைவர்கள், மனநலம் குன்றிய நிலையிலே, இன்று தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே கூட இதுபோன்ற நிலையிலே மாறிக்கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பிறப்பிலே அறிவு நலத்தோடு பிறந்து, தன்னுடைய வாழ்க்கைப் போராட்டத்திலே தோல்வியைக் கண்ட காரணத்தால், விரக்தியின் எல்லைக்குச் சென்று மனநலம் குன்றிய இதுபோன்ற அறிவு மிகுந்த மனநலம் குன்றியவர்களுக்கு ஏதாவது மன நல மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமான ஆளாக இருந்தாலும், அல்லது பெரிய ஜீனியஸ் ஆக இருந்தாலும், மனநலம் குன்றிவிட்டால், எல்லோரும் ஒரேமாதிரியாகத்தான் ஆகிவிடுகிறார்கள். அதிலே பெரிய வித்தியாசம் அங்கே பார்க்கமுடியாது. ஆகவே இப்போது இருக்கிற இடமே போதும். அதுவே மிகச் சிறப்பாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அங்கே இருப்பவர்கள் தான் நிம்மதியாக இருக்கிறார்கள். அவர்கள் நல்லபடியாக இருக்கிறார்கள். அரசாங்கம் அந்த அளவுக்கு அவர்களைக் கவனித்துக் கொள்கிறது. அங்கே நான் பலமுறை போய் அவர்களுடன் உணவு அருந்திவிட்டு வந்திருக்கிறேன். அவர்களை நிம்மதியோடு வைத்துக்கொள்வதற்கு அத்தனை ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது.

1996 பிப்ரவரி 20]

எனவே, இதற்கு மேலும் புதிதாக எந்த தனி ஏற்பாடும் அவர்களுக்கு என்று வைக்கவேண்டிய அவசியம் இல்லை. எனவே சிறப்பாக இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி *(குறுக்கீடு)* இது மெண்டல் ஆஸ்பத்திரியைப் பற்றியது. *(சிரிப்பு)*

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன நல மையத்தில், அந்த ஆஸ்பத்திரியில் அந்த மனநோயாளிகளைச் சேர்ப்பதற்கு என்னென்ன விதிமுறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன? சட்டமன்ற உறுப்பினர்களிடம் மனுக்கள் கொடுக்க வருகின்றவர்கள், என்னுடைய பிள்ளை மனநலம் குன்றியிருக்கிறது. போலீசுக்குத் தகவல் கொடுங்கள். ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுங்கள் என்றெல்லாம் கூட சொல்கிறார்கள் இதனால் எங்களுக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. ஆகவே, என்ன விதிமுறைகள் இதில் போடப்பட்டிருக்கின்றன? சில நேரங்களில் சொத்துத் தகராறு காரணமாக சில பெரிய கோடீஸ்வரர்களாக இருந்தாலும் கூட அவர்களை மன நல மையத்தில் சேர்த்து விடுகிறார்கள். அதனால், இதில் சேர்ப்பதற்கு என்னவித முறை இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். மன நல மையம் குற்றாலம், கன்னியாகுமரி போன்ற இந்த மாதிரி இடங்களில் இருந்தால் மன நிம்மதி கிடைக்கும். எனவே இதுபோன்ற இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா? அரசியல் மன நோயாளிகளுக்கு என்று தனி ஆஸ்பத்திரி ஆரம்பிப்பதற்காக ஏதாவது உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன். *(சிரிப்பு)*

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒன்றும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. அங்கே போனால் சேர்த்துக்கொள்வார்கள். ஒன்றும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. *(சிரிப்பு)* ஆனால் சேர்த்துக் கொள்வதற்கு முன்னாலே அவர்கள் பரிசோதிப்பார்கள். அவசியம் இருந்தால் அட்மிஷன் எடுத்துக் கொள்கிறார்கள். யாராவது சொந்தக் காரர்கள் அழைத்துப் போனால் பிரச்சினை இல்லை. ஆனால் சில நேரங்களில் யார் என்று தெரியாமல் அநாதைகளாக இருக்கிறபோது அதற்கு காவல் துறையிலிருந்து அவர்கள் பரிந்துரை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம் எந்த வகையில் வந்தவர்கள், வேறு ஏதாவது அவர்களுக்கு பிரச்சினை இருக்கிறதா என்று இதையெல்லாம் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால் இந்த முறைகள்

வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் நம்முடைய மருத்துவமனையைப் பொறுத்தவரையில் இடம் இல்லையென்று திருப்பியனுப்புவது இல்லை. ஆனால் நான் ஏற்கனவே சொன்னதைப்போல அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிற சிக்கல் என்னவென்றால் கொண்டு வந்து சேர்க்கிறபோது பெரும்பகுதியானவர்கள் எல்லோரும் என்று சொல்ல முடியாது, பெரும்பகுதியானவர்கள் சரியான விலாசத்தைக் கொடுப்பதில்லை. அட்ரஸ் இல்லாத காரணத்தால் ஓரளவுக்கு அவர்கள் சரியான பின்னாலே முகவரி தெரியாமல் நம் மருத்துவமனையிலேயே வைத்து பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. இப்போது அதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோய்க்காரர்களை ஒரே இடத்தில் வைத்து அவர்களுக்கு நல்லமுறையில் சிகிச்சை அளிப்பதைப்போல இந்த மனநோயாளிகள் கிராமங்களில், பல்வேறு நகரங்களிலும் கூட வீதிகளில் பஸ்கள் வருகிறபோது, வண்டி வாகனங்கள் வருகிறபோது குறுக்கும் நெடுக்குமாகச் சென்று திரிந்து கொண்டிருக்கிறார்கள், பார்ப்பவர்களுக்கும் அருவருப்பாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்படிப்பட்டவர்கள் தமிழகத்தில் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அவ்வளவு பேர்களையும் காவல் துறை மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது அதிகாரிகள் துணையுடனோ அவர்களை மன நோய் மையங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு நிரந்தரமாக அங்கே தங்கியிருக்கிற அளவுக்கு, அவர்கள் வெளியே வராத அளவுக்கு, பாதுகாக்கிற அளவுக்கு நடவடிக்கையெடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழு நோயாளிகளைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். தொழு நோயாளிகளைப் பொறுத்தவரையில் எந்த பயமும் நாட்டிலே தேவையில்லை. காரணம் ஆறு மாதங்களுக்குள்ளாக சாதாரண தொழு நோய் குணமடைகிற அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மிக வெற்றிகரமாக நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. ''இன்பெக்ட்டட் கேஸ்'' பொறுத்தவரையில் கொஞ்சம் காலம் கூடுதலாக எடுக்கும். எனவே தொழு நோயாளிகளை ஒதுக்கி வைக்கவேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு, தனிப்பட்ட முறையில் அவர்களை ஒதுக்கித் தள்ள வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு இப்போது நல்ல முன்னேற்றம்

1996 பிப்ரவரி 20]

ஏற்பட்டிருக்கிறது. எனவே அதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல மனநோயாளிகளைப் பொறுத்த வரையில் ஆங்காங்கே எங்கே இருந்தாலும் அவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டால், அதற்கு பின்னாலே அவர்களை பராமரிக்க முழு பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டுதான் இருக்கிறோம். இது நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் கொண்டு வந்து சேர்க்கிற பொறுப்பு சொந்தக்காரர்களைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். இல்லையென்றால் யாராவது பொதுநலவாதிகளாக இருக்க வேண்டும். அல்லது காவல் துறை கூட அந்த காரியத்தை செய்வதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனவே, அந்த அளவுக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டால் வெளியே அனுப்பாமல் எவ்வளவு காலத்திற்கு சிகிச்சை தேவையோ - 10 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக்காலம் கூட இருக்கிறார்கள். இங்கேயே இருந்து தங்களுடைய வாழ்க்கையை முடித்துக்கொள்கிற அளவுக்கு கூட பலபேர் தொடர்ந்து இருந்து வருகிறார்கள். எனவே அப்படி எந்த அளவுக்கு வேண்டுமானாலும் அவர்களுக்கு பராமரிப்பைக் கொடுப்பதற்கு நிச்சயமாக இந்த அரசாங்கம் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் இதைப்பொறுத்தவரையில் செலவழிக்க தயாராக இருக்கிறது. காரணம் அவர்கள் குழந்தைகளுக்கு சமமாக மதிக்கப்படுகிற காரணத்தால் அவர்களை பராமரிக்கிற முழு பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. எனவே கொண்டுவந்து சேர்க்கிற பொறுப்பை ஆங்காங்கே இருக்கிறவர்கள் எடுத்துக்கொண்டால் அரசாங்கம் இந்தப் பணியைச் செய்வதற்கு தயக்கம் எள் அளவும் காட்டாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 64, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

64—

நெல் கொள்முதல் நிலையங்களில் பிடித்தம் செய்தல்

***20769**—திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல் கொள்முதல் நிலையங்களில் மூட்டைக்கு இவ்வளவு என்று நிர்ணயம் செய்து பிடித்தம் செய்வதை நிறுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS